# தமிழ் களஞ்சியம்

1. உ.வே.சா.யாரைக் குறிக்கும். சாமிநாத ஐயரைக் குறிக்கும்.
2. "தமிழ்த்தாத்தா" என்று அழைக்கப்படுபவர் யார்?
   டாக்டர். உ.வே. சாமிநாத ஐயர்.
3. உ.வே.சா.அவர்களின் ஆசிரியர் யார்? திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.
4. தன் ஆசிரியரின் பெருமை துலங்க உவேசா எழுதிய நூல் எது?
   மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திரம்.
5. உ.வே.சா அவர்களின் உரைநடை நூல்கள் யாவை?
   "புதியதும் பழையதும்" "கண்டதும் கேட்பதும்" "நினைவு மஞ்சரி"
6. உ.வே.சா அவர்கள் எந்தெந்தக்கல்லூரிகளில் ஆசிரியர்ப் பணி புரிந்துள்ளார்?.
   சென்னை, குடந்தை-அரசினர் கல்லூரி.
7. ஆங்கில அரசு உ.வே.சா அவர்களுக்கு அளித்துப் பாராட்டிய பட்டம் என்ன?
   "மகாமகோபாத்தியாய" என்னும் பட்டம்.
8. உ.வே.சா தமிழ்ப்பணிக்காகச் செலவிட்ட ஆண்டுகள் எத்தனை?
   60 ஆண்டுகள்
9. வை.மு கோபாலகிருஷ்ணமாச்சாரியார் உரைவகுத்துள்ள நூல்கள் எவை? (வை.மு.கோ. உரை)
   பத்துப்பாட்டு, திருக்குறள், தண்டியலங்காரம், வில்லிபாரதம், கம்பராமாயணம்.
10. மறைமலை அடிகள் பிறந்த ஊர் எது?.
    நாகையை அடுத்த காடம்பாடி.
11. மறைமலை அடிகளின் இயற்பெயர் என்ன?
    சுவாமி வேதாச்சலம்.
12. மறைமலை அடிகள் கற்றுத்தேர்ந்த மொழிகள் யாவை?.
    தமிழ், வடமொழி, ஆங்கிலம்.
13. நற்றிணையில் 72-ஆம் பாடலைப் பாடியவர் யார்?
    இளம்போதியார்.

அறிவுக்கடல் பதிப்பகம்

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

14. வண்ணக்களஞ்சியப் புலவரின் இயற்பெயர் என்ன?.
ஹமீது இப்ராஹீம்.
15. சேகனாப் புலவரின் பள்ளித்தோழர் யார்?
குணங்குடி மஸ்தான் சாகிபு.
16. காளமேகப் புலவர் பிறந்த ஊர் எது?.
நந்திபுரம்.
17. காளமேகப் புலவரின் இயற்பெயர் என்ன?.
வரதன்.
18. காளமேகப் புலவர் எவ்வகைப் பாக்கள் பாடுவதில் சிறந்து விளங்கினார்?.
ஆசுகவி, வசைபாடல்.
19. சிலேடைநயம் பொருந்தப் பாடுவதில் சிறந்து விளங்கியவர் யார்?.
காளமேகப்புலவர்.
20. இரட்டையர் என்பது யாரைக் குறிக்கும்?.
இளஞ்சூரியர், முதுசூரியர்
21. இரட்டையரிடம் காணப்பட்ட பிறவி ஊனம் என்ன?.
ஒருவர் குருடர் மற்றொருவர் முடவர்.
22. பட்டினத்தாரின் இயற்பெயர் என்ன?.
திருவெண்காடர்.

23. பட்டினத்தார் சமாதி அடைந்த இடம் எது?.
திருவொற்றியூர்.
24. சங்கம் மருவிய காலத்தில் புகுந்து ஆட்சிபுரிந்த அயலவர் யார்?
களப்பிரர்.
25. எட்டுத்தொகை நூல்களுள் புறப்பொருள் உரைக்கும் நூல்கள் எவை?.
பதிற்றுப்பத்து, புறநானூறு.
26. நற்றிணையில் அமைந்துள்ள பாடல்கள் எத்தனை?.
400.
27. நற்றிணையின் அடி வரையறையினைக் கூறுக.
9 - 12.
28. நற்றிணையைத் தொகுப்பித்தவர் யார்?.
பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி.
29. நற்றிணைப் பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கை என்ன?
175 பேர்.

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

30. கலித்தொகைப் பாடல்கள் எந்தப்பாவினால் அமைந்தவை?.
கலிப்பாவகை.
31. கலித்தொகைப் பாடல்களின் எண்ணிக்கை என்ன?.
150.
32. கலித்தொகைப் பாடல்களைத் தொகுத்தவர் யார்?.
நல்லந்துவனார்.
33. கலித்தொகைப் பாடல்களைப் பாடியோர் எத்தனை பேர்?
5 பேர்.
34. பாலைக்கலி பாடியவர் யார்?.
பெருங்கடுங்கோன்.
35. பாலைக்கலிப் பாடல்கள் எத்தனை?.
35.
36. குறிஞ்சிக்கலி பாடிய புலவர் யார்?.
கபிலர்.
37. குறிஞ்சிக்கலி பாடல்களின் எண்ணிக்கை?.
29.
38. மருதக்கலி பாடியவர் யார்?.
மருதனிள நாகனார்.
39. மருதக்கலி பாடல்களின் எண்ணிக்கை?.
35.
40. முல்லைக்கலியின் ஆசிரியர் யார்?
நல்லுருத்திரன்.
41. முல்லைக்கலி பாடல்களின் எண்ணிக்கை?.
17.
42. நெய்தற்கலியின் ஆசிரியர் யார்?.
நல்லந்துவனார்.
43. நெய்தற்கலி பாடல்களின் எண்ணிக்கை என்ன?.
33.
44. அகநானூற்றுப் பாடல்களைத் தொகுப்பித்தவர் யார்?.
பாண்டியன் உக்கிரப்பெருவழுதி.
45. அகநானூற்றுப் பாடல்கள் எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன? அவையாவை?
மூன்று பிரிவுகள், களிற்றுயானை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை.
46. அகநானூற்றில் ஒற்றை எண்ணால் அமைந்த பாடல்கள் எந்தத் திணைக்குரியவை? பாலைத்திணை.

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

47. அகநானூற்றில் முல்லைத் திணைக்குரிய பாடல்கள் எந்த எண்ணால அமைந்தவை?
4
48. நெடுந்தொகை என்பது எந்த நூலைக் குறிக்கும்?
அகநானூறு.
49. எட்டுத்தொகையுள்ள சேர அரசர்கள் பற்றிச் சிறப்பித்துக் கூறும் நூல் எது?
பதிற்றுப்பத்து
50. பதிற்றுப்பத்தில் அந்தாதித் தொடையால் அமைந்துள்ள பத்து எது?
நான்காம் பத்து.
51. பதிற்றுப்பத்துப் பாடல்கள் எந்தத் திணையில் அமைந்துள்ளன?
பாடாண் திணை.
52. பரிபாடலில் திருமாலுக்குரிய பாக்கள் எத்தனை?
8.
53. பரிபாடலில் முருகனுக்கும் காளிக்கும் எத்தனைப் பாடல்கள்?
முருகனுக்கு- 31, காளிக்கு-1.
54. பரிபாடலில் மொத்தம் எத்தனைப் பாக்கள் இருக்கும்?
70.
55. கல்வியின் பொருட்டு ஏற்படும் பிரிவு எத்தனை ஆண்டுகள்?
மூன்றாண்டுகள்.
56. மடலேறுதல் யாருக்குரிய செயல்?
தலைவன்.
57. நம்பியகப் பொருள் கூறும் உடன்போக்கின் வகைகள் எத்தனை?
எட்டு.
58. அல்லகுறி எவ்வகையைச் சேர்ந்தது?
இரவுக் குறி இடையீடு.
59. “பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு”- இக்குறளுக்கு அழகூட்டும் அணி யாது?
சொற் பொருள் பின்வருநிலையணி.
60. அறத்தோடு நிற்றலுக்கு உரியவர் யார்?.
தோழி.
61. பதினெண் மேற்கணக்கு நூல்கள் யாவை?.
எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்.

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

62. பழந்தமிழர் நேரத்தைக் கணக்கிட நாழிகை வட்டிலைப் பயன்படுத்தினர் என்பதை அறிவிக்கும் நூல் எது?
முல்லைப்பாட்டு.
63. செல்வம் பெருகியுள்ள காலத்தில் ஒருவன் என்ன செய்யவேண்டும்?
அறம் செய்ய வேண்டும்.
64. "மானம் அழிய நேர்ந்தால் உயிர் விடுபவர்" எதைப்போன்றவர்?.
கவரிமான்.
65. செவிலி என்பவள் யார்?
வளர்ப்புத்தாய்.
66. புரையோர் கேண்மை என்பது எது?.
உயர்ந்தோர் நட்பு
67. இரண்டாம் பத்தின் பாட்டுடைத்தலைவர் யார்?.
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.
68. முல்லைப்பாட்டை இயற்றியவர் யார்?.
நப்பூதனார்.
69. எட்டுத்தொகையில் அகமும், புறமும் கலந்த நூல் எது?.
பரிபாடல்.

70. "செலவழுங்குவித்தல்" என்றால் என்ன?.
பொருள் வயின் பிரிவைத்தடுப்பது.
71. கலைகளில் சிறந்தது இலக்கியக்கலை என்று கூறியவர் யார்?.
அ.ச..ஞானசம்மந்தன்.
72. எட்டுத்தொகை நூல்களுள் புறம் பற்றியவை எத்தனை நூல்?
இரண்டு. அவை புறநானூறு, பதிற்றுப்பத்து
73. வசந்தவல்லி என்ற பாத்திரம் இடம்பெற்ற இலக்கியம்.
குற்றாலக்குறவஞ்சி
74. மலைபடுகடாம் என்ற நூல் எவ்வகை நூல்?
ஆற்றுப்படை நூல்.
75. தொகுத்தவர் தொகுப்பித்தவர் பெயர் கிடைக்காத நூல் எது?
புறநானூறு.
76. கூத்தராற்றுப்படை என்னும் நூலின் வேறுபெயர் என்ன?
மலைபடுகடாம்.
77. "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்ற பாடலைப் பாடியவர் யார்?.
ஔவையார்.
78. புலவராற்றுப்படை என்று அழைக்கப்பெறும் ஆற்றுப்படை நூல் எது?

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

திருமுருகாற்றுப்படை.

79. "மணிமிடைப்பவளம்" என்னும் பகுதியைக் கொண்ட அகநூல் எது?
அகநானூறு.

80. "தென்னிந்திய வரலாற்றுத் தொடக்கம்"
எஸ் கிருஷ்ணசாமி ஐயங்கார்

81. "தீதும் நன்றும் பிறர்தர வாரா, நோதலும் தணிதலும் அவற்றோரன்ன சாதலும்" என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?.
புறநானூறு.

82. ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ் வையம் தழைக்குமாம் – இப்பாடல் வரியை இயற்றிய கவிஞர் யார்?
பாரதியார்.

83. அகநானூற்றுப் பாடல்களைத் தொகுத்தவர் யார்?.
உருத்திரசன்மனார்.

84. இசையும் எனினும் இசையாது எனினும் வசைதீர எண்ணுவர் சான்றோர் – இப்பாடல் வரியுள்ள நூல் எது?
நாலடியார்.

85. பத்துப்பாட்டில் அடிகளின் அளவு அதிகம் கொண்டது.
மதுரைக் காஞ்சி.

86. "செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாங்கலந்தனவே" பாடல் இடம் பெறும் நூல் எது?
குறுந்தொகை.

87. இடைச்சங்கம் அமைந்திருந்த இடம் எது?
கபாடபுரம்.

88. இல்லம் சிறியாரைக் கொண்டு புகுதல்
அறியாமை யான் வருங் கேடு – இப்பாடல் வரியுள்ள நூல் எது?
திரிகடுகம்

89. வேகவதி என்பது எதைக் குறிக்கும்.
வைகை ஆற்றைக் குறிக்கும்.

90. வீரயுகப் பாடல் என்ற சிறப்பிற்குரிய இலக்கிய வகை எது?
சங்க இலக்கியங்கள்.

91. கடையேழு வள்ளல்களின் ஈகைச் சிறப்பைக் கூறும் நூல் எது?
சிறுபாணாற்றுப்படை.

92. "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்" எந்நூலில் இடம் பெற்றுள்ளது?
தொல்காப்பியம்.

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

93. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் போர் பற்றிய நூல் எது?.
களவழி நாற்பது.

94. ஆரிய அரசன் பிரகதத்தனுக்கு தமிழ் அறிவுறுத்ததற்காகப் பாடப்பட்ட நூல் எது?
குறிஞ்சிப்பாட்டு.

95. சடையப்ப வள்ளல் ஆதரித்த புலவர் யார்?
கம்பர்.

96. புறநானூறும் சிலப்பதிகாரமும், "ப∴றுளி ஆறு" என்ற ஓர் ஆற்றைக் குறிப்பிடுகின்றன சரியா? தவறா?
சரி.

97. பத்துப்பாட்டில் அகமா? புறமா? என்ற விவாதத்துக்கு உரிய நூல் எது?
நெடுநல்வாடை.

98. இல்லம் சிறியாரைக் கொண்டு புகுதல்
அறியாமை யான் வருங் கேடு – இப்பாடல் வரியுள்ள நூல் எது?
திரிகடுகம்

99. "மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்ற பாடலடி இடம் பெறும் நூல்?
இனியவை நாற்பது.

100. இடைச்சங்கமிருந்து தமிழாய்ந்தவர் யார்?
அகத்தியனார்.

101. அகநானூற்றின் அடிவரையறை என்ன?
13 முதல் 31 அடி வரை.

102. பண் இனிது பாடல் உணர்வார் அடுத்து – இப்பாடல் வரியுள்ள நூல் எது?
நான் மணிக் கடிகை

103. முதன்முதலில் தமிழ்இலக்கிய வரலாற்றை எழுதியவர் யார்?
கா. சு. பிள்ளை.

104. சங்கம் என்னும் சொல் முதன்முதலில் இடம்பெறும் இலக்கியம்.
அப்பர் தேவாரம்.

105. 'சிலகற்றார்கண்ணும்உளவாம்பலகற்றாக்குஅச்சாணிஅன்னதோர்சொல்' – இப்பாடல் வரியுள்ள நூல்எது?
அறநெறிச் சாரல்

106. "வெல்வது வேண்டின் வெகுளி விடல் – இப்பாடல் வரியுள்ள நூல் எது?
நான்மணிக்கடிகை

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130
அறிவுக்கடல் பதிப்பகம்

107. சங்க இலக்கியத் தொகை நூல்களுள் ஒரே அரச பரம்பரையைப் பற்றிய நூல் எது?.
பதிற்றுப்பத்து.

108. விருந்தினர் பிரியும் பொழுது அவர் பின் ஏழடி நடந்து சென்று வழியனுப்பும் மரபு இடம் பெறும் நூல்.
பொருநராற்றுப்படை.

109. "கபிலர்" என்றவுடன் நினைவுக்கு வரும் திணை?
குறிஞ்சித்திணை.

110. "தமிழர் வரலாறு"நூலின் ஆசிரியர் யார்?
பி. டி. சீனிவாச ஐயங்கார்

111. "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" - என்றவர்.
ஔவையார்.

112. சங்க இலக்கியத்தில் முதலிடம் தரப்படுவது. எதற்கு?
இயற்கையின் இனிமையான வருணனைக்கு.

113. நக்கீரர் இயற்றிய பத்துப்பாட்டு நூல்கள் யாவை?
திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை.

114. "நல்லார்க்கும் தம் ஊர் என்று ஊரில்லை நன்னெறிச்
செல்வார்க்கும் தம் ஊர் என்று ஊரில்லை" – இவ்வரியுள்ள நூல் எது?
நான்மணிக்கடிகை

115. தொகை நூல்களுள் ஐந்திணை அடிப்படையில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புலவரால் பாடப்பெற்ற தனித்தன்மை பெற்றவை.
ஐங்குறுநூறு கலித்தொகை.

116. தூது சென்ற பெண்பாற் புலவர் யார்?
ஔவையார்.

117. இடைச்சங்கம் இருந்த இடம் எது?
கபாடபுரம்.

118. சங்கப் பாடல்களுள் அதிகமான பாடல்களைப் பாடியவர் யார்?
கபிலர்.

119. நெடுநெல்வாடையின் ஆசிரியர் யார்?
நக்கீரர்.

120. நெஞ்சாற்றுப்படை என்று பெயர் பெறும் நூல் எது?
முல்லைப்பாட்டு.

121. ஆற்றுப்படை இலக்கியத்தின் முதன்மை நோக்கம் என்ன?
இரவலனை வழி நடத்துதல்.

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

122. ஆற்றுப்படை நூல்களில் அளவில் பெரியது எது?
கூத்தராற்றுப்படை.

123. "பெருந்தேன் கண்ட இருக்கை முடவன் உட்கைச் சிறுகுடை கோவில்" - என்ற தொடரைக் கையாண்ட புலவர்.
ஒளவையார்.

124. அதியமான் யாரிடம் ஒளவையாரைத் தூதாக விடுத்தான்?.
தொண்டைமானிடம்.

125. உலக மொழிகளில் பலவற்றில் மொழியாக்கஞ் செய்யப்பட்ட நூல் எது?
திருக்குறள்.

126. திருக்குறளை முதலில் ஆங்கிலத்தில் முழுமையாக மொழிபெயர்த்தவர் யார்?
ஜி.யு. போப்.

127. ஒரே பெயரில் இரண்டு அதிகாரங்கள் திருக்குறளில் அமைந்துள்ளன. அவை எவை?
குறிப்பறிதல்

128. திருக்குறள் அறத்துப்பாலில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?
38.

129. திருவள்ளுவர் நட்பு பற்றி வலியுறுத்தும் அதிகாரங்கள் எத்தனை?
4.

130. "தமிழ் மறை" எனப்போற்றப்படும் நூல் எது?
திருக்குறள்.

131. பத்துப்பாட்டில் குறைந்த அடியளவால் பாடப்பட்ட நூல் எது?
முல்லைப்பாட்டு.

132. "துறைதொறும் பரிக்கும் தூமணற் சேர்ப்பனை யானுங் காதலன் யாயும் நனி வெய்யுள்" - இப்பாடலடி எத்திணை பாடலடி?
நெய்தல்.

133. "உற்றின் புறோ மாயினும் நற்றேர்ப் பொய்கை யூரன் கேண்மை செய்தின் புற்றனெம் செறிந்தன வளையே"- இது என்ன திணைப்பாடல்?
நெய்தல்.

134. வேதாசலம் என்னும் பெயருக்குரியவர் யார்?
மறைமலையடிகள்.

135. "இன்மையின் இன்னாதது" எதுவென வள்ளுவர் கூறுகிறார்?
வறுமை.

136. நான்கு வருணத்தாருக்குமுரிய பிரிவு என நம்பியகப் பொருள் கூறுவது எதனை?

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

தூதிற்பிரிவு.

137. “ஆற்றிடை நும்மொடு துன்பம் துணையாக நாடின் அது அல்லது இன்பமும் உண்டோ எமக்கு?” - என்ற கலிப்பா அடிகள் யார் கூற்றில் அமைந்தவை?
தலைவன்.

138. “தோல் விலைக்குப் பசுவினைக் கொல்லும் துட்டனிவ் வுரை கூறுதல் கேட்டே”............ இங்குச் சுட்டப்படும் துட்டன் யார்?
துரியோதனன்.

139. “சுரை ஆழ அம்மி மிதப்ப வரையனைய யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப கானக நாடான் சுனை”- என்ற பாடலை புரிந்துகொள்ள எந்தப் பொருள் கோள் பயன்படும்?
மொழிமாற்றுப் பொருள்கோள்.

140. “பகைச்சுடர் சுட்டிய படைகொள் நோன்விரல் நகைத்தாழ் கண்ணி நல்வளம் திருத்தி அரசு இருந்து பணிக்கும் முரசு முழங்கு பாசறை” - என்ற அடிகள் இடம் பெறும் நூல் யாது?
முல்லைப்பாட்டு.

141. “நோயேம் ஆகுதல் அறிந்துஞ் சேயர் தோழி சேய்நாட் டோரே என்ற குறுந்தொகையின் ஆசிரியர் யார்?
கபிலர்.

142. “தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வுகள்” நுலின் ஆசிரியர் யார்?
வி. ஆர். ராமச்சந்திர தீக்ஷிதர்

143. “தம்முளே புணர்ந்த தாம் அறிபுணர்ச்சியர் அன்னார் இருவரைக் காணீரோ” - என்ற பாடல் அடிகள் யார் கூற்றில் அமைந்தது?
செவிலி.

144. “இலக்கியக் கலை” என்ற நூலின் ஆசிரியர் யார்?
அ.ச.ஞானசம்மந்தன்

145. கற்புக் காலத்துப் பிரிவு எத்தனை வகைப்படும்?
ஆறு.

146. மகள் மறுத்து மொழிதல் துறை எந்தத் திணையில் இடம் பெற்றுள்ளது?
காஞ்சித்திணை.

147. முல்லைத்திணைக்குரிய பெரும் பொழுது யாது?
இளவேனில்.

148. “அறிவை வளர்த்திட வேண்டும் –மக்கள்
அத்துணைப் பேருக்கும் ஒன்றாய்” – இவ்வரியை இயற்றியது யார்?
பாரதியார்

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

149. “வெயிற்கேற்ற நிழல் உண்டு வீசும் தென்றல் காற்றுண்டு”- என்ற பாடலடிகள் இடம் பெற்ற நூலின் ஆசிரியர்?

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

150. “இது பொறுப்பதில்லை - தம்பி எரிதழல் கொண்டுவா கதிரை வைத்திழந்தான் - அண்ணன் கையை எரித்திடுவோம்”- இது யார் கூற்று?

வீமன்.

151. அகநானூற்றில் அமைந்துள்ள பாடலடியால் பெயர் பெற்ற புலவர் யார்?

மாமூலனார்.

152. “எத்துணை யாயினும் ஈத்தல் நன்றென மறுமை நோக்கின்றோ அன்றே பிறர், வறுமை நோக்கின்றவன் கைவண்மையே” - என்று பரணர் யாருடைய கைவண்மையைப் பாடுகிறார்?

பேகன்.

153. “இருவே மாகிய வுலகத்து ஒருவே மாகிய புன்மை நாம் உயற்கே”- என்ற பாடலடி இடம் பெற்றுள்ள நூல் எது?

நற்றிணை.

154. கற்பு எத்தனை வகைபடும் என்று நம்பியகப் பொருள் கூறுகிறது?

ஐந்து.

155. பெரும்பொழுது ஆறனையும் பெற்று விளங்கும் திணை யாது?

மருதம்.

156. வினை வெ஼கி நீ செலின், விடும் இவள் உயிர் - இப்பாடலடி அமைந்த நூல் எது?

கலித்தொகை.

157. மற்ற உயிர்களிலிருந்து மாந்தரை வேறுபடுத்துவது எது என வள்ளுவர் கூறுகிறார்?

நாணம்.

158. “சூழுங்கால் நும்மகள் நுமக்கும் அங்கு அனையவளே” என்று கூறியது?

செவிலி.

159. “களிறு பொரக் கலங்கிய தண்கயம் போல மென்புனல் வைப்பின் இத் தன்பனை யூரே” -இப்பாடலடிகள் அமைந்துள்ள பாடலின் துறை யாது?

வல்லாண் முல்லை.

160. “காவிரி நாடன் திகிரி போல் பொற்கோட்டு மேரு வலந்திரிந்து” யாது?

கதிரவன்.

161. “மாலை வாரார் ஆயினும் மாணிழை காலை காண்குவமெனக்” -கூறியவர்?

வசந்தமாலை.

162. “நெஞ்சில் நான் பெண்ணை எளிதாய் நினைக்கிலேன்”- என்று கூறியவர்?

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

சேனாபதி.

163. பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தில் அமைந்துள்ள முதல் ஐந்து பாடல்களும் என்ன துறையில் அமைந்துள்ளன?
செந்துறைப் பாடாண் பாட்டு.

164. "மடமயில் அன்ன என் நடை மெலி பேதை தோள்துணை யாகத் துயிற்றத் துஞ்சாள்"- இதுயார் கூற்றில் அமைந்த பாடல்?
தலைவன்.

165. பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தின் பாட்டுடைத்தலைவன் யார்?
கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன்.

166. பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தினைப் பாடிய புலவர் யார்?.
குமட்டூர் கண்ணனார்.

167. "கரும்பின் பாத்தில் பூத்த நெய்தல் இருங்கண் எருமை நிறை தடுக்குநவும்" - என்ற பாடலடிகள் அமைந்த நூல் யாது?.
பதிற்றுப்பத்து.

168. "கன்று பயிர் குரல, மன்று நிறை புகுதேரும் ஆ பூண் தெண்மனி ஐது இயம்பு இன் இசை புலம்புகொள் மாலை கேட்டொறும்" - இது என்ன திணைப்பாடல்.
முல்லை.

169. "யான் எவன் செய்கோ?. தோழி பொறிவரி வானம் வாழ்த்திப்பாடவும் அருளாதுஉறை துறந்து எழிலி நீங்கலின்" இது யார் கூற்றிலமைந்த பாடலடிகள்?.
தலைவி

170. "மாதிரம் பணிக்கும் மறம்வீங்கு பல்புகழ் கேட்டற்கு இனிது" என்ற அடிகள் இடம்பெற்றுள்ள பாடல் யாது?.
பதிற்றுப்பத்து.

171. "உன்நாட்டை நீ ஆள ஒண்ணுமோ சொல்லடா!" என்று கூறியவர்?.
சேனாபதி.

172. "கொழுங்கண் அயிலை பகுக்கும் துறைவன் நம்மொடு புணர்ந்த கேண்மை முன்னே அலர்வாய்ப் பெண்டிர் அம்பல் தூற்ற"-இது என்ன திணைப்பாடல்.
நெய்தல்.

173. "பிறவியை வேரறுப்பவன்" யார்?.
சிவன்.

174. ஐங்குறுநூற்றில் இடம் பெற்றுள்ள முல்லைத்திணைக்குரிய பாடல்களைத் தொகுத்தவர் யார்?
பேயனார்.

175. சேர மன்னர்களைப் பற்றி மட்டுமே பாடும் எட்டுத்தொகை நூல் எது?

அறிவுகடல் பதிப்பகம்
www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

பதிற்றுப்பத்து.

176. "அறிவு எனப்படுவது பேதையார் சொல்நோன்றல்" எனக் குறிப்பிடும் எட்டுத்தொகை நூல் யாது?
புறநானூறு.

177. "விளைக வயலே வருக இரவலர்" எனக் கூறும் நூல் எது?
புறநானூறு.

178. "முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்" என்று குறிப்பிடும் நூல் யாது?
நற்றிணை.

179. "கற்றறிந்தோர் ஏத்தும்" என்ற அடைமொழியுடைய நூல் எது?
கலித்தொகை.

180. "சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"என்று கூறிய புலவர் யார்?
பொன்முடியார்

181. "குடவோலைமுறை" பற்றிய குறிப்பினைக் கொண்ட சங்க நூல் எது?
குறிஞ்சிப்பாட்டு.

182. "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்று கூறியவர் யார்?
கணியன் பூங்குன்றனார்.

183. இன்று நமக்குக் கிடைத்த பரிபாடல் எண்ணிக்கையைக் கூறுக?
22.

184. கலித்தொகையில் இடம் பெற்றுள்ள மருதத்திணை பாடல்களின் எண்ணிக்கையைக் கூறுக?
35.

185. பத்துப்பாட்டு நூல்களின் ஆற்றுப்படை நூல்கள் எத்தனை?
ஐந்து.

186. "எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!" – யார் கூறியது?
ஔவையார்

187. குறிஞ்சித்திணைப்பாடல்களைப் பாடுவதில் வல்ல புலவர் யார்?
கபிலர்.

188. காயிலாத சோலைக் கனியுகந்த வண்டுகாள்
ஈயிலாத தேனையுண்டு இராப்பகல் உறங்குறீர்? யார் கூற்றியது?
சிவவாக்கியர்

189. சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் யார்?
ஒய்மானாட்டு நல்லியக்கோடன்.

190. பெரும்பாணாற்றுப்படையையும் பட்டினப்பாலையையும் இயற்றிய புலவர் யார்?
கடியலூார் உருத்திரங்கண்ணனார்.

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

191. பொருநராற்றுப்படையின் பாடலடிகள் எத்தனை?
248.

192. அறத்தோடு நிற்றல் துறையிலமைந்த பத்துப்பாட்டு நூல் எது?
குறிஞ்சிப்பாட்டு.

193. தொண்ணூற்றொன்பது வகையான மலர்களைப் பற்றிக் குறிப்பிடும் நூல் யாது?
குறிஞ்சிப்பாட்டு.

194. "வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகம்" என்ற பாடலடிகள் இடம் பெறும் நூல் எது?
நெடுநல்வாடை.

195. தமிழில் தோன்றிய முதல் காப்பியம் எது?
சிலப்பதிகாரம்.

196. "பசிப்பிணி என்னும் பாவி" என்று கூறியவர் யார்?
சீத்தலைச்சாத்தனார்.

197. மாதவி ஆடிய ஆடல்களின் எண்ணிக்கையினைக் கூறுக.
பதினொன்று.

198. சிலப்பதிகாரத்தின் திருப்புமுனையாக அமையும் காதை எது?
கானல் வரி.

199. இலக்கியத்தில் பரவி நிற்கும் அழகுத் தன்மையைப் பல நோக்குகளில் ஆராய்வது எத்திறனாய்வு முறை?
முருகியல் முறைத் திறனாய்வு.

200. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறு நல்லுலகம்"-எனத் தமிழகத்தின் எல்லை சுட்டியவர் யார்?
பனம்பாரனார்.

201. ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தியில் என்ற தொடர் அமைந்த நூல்.
புறநானூறு.

202. "அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையள்" என்று தலைவியைச் சிறப்பிக்கும் நூல்.
கலித்தொகை.

203. புறப்புண் என நானி வடக்கிருந்த மன்னன்.
பெருஞ்சேரலாதன்.

204. "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" என விரும்பிய அரசன்
கிள்ளி வளவன்.

205. புலிகடி மாஅல் என்ற சிறப்புப்பெயர் புனைந்தவன்.
இருங்கோவேள்

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

206. பெண்கொலை புரிந்த மன்னன் யார்?
நன்னன்.
207. நடுவுநிலைத்திணை என்று இதற்குப் பெயர் உண்டு?
பாலை.
208. "புனையா ஓவியம்" என்ற தொடர் அமைந்த நூல்?
நெடுநல்வாடை.
209. "கற்றலின் கேட்டலே நன்று" என்ற வரியுள்ள நூல்?
பழமொழி
210. பிற்காலச் சிற்றிலக்கியம் ஒன்றின் வளர்ச்சியைக் குறிக்கும்
"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிய"
211. கருப்பொருளில் பறவைகள், விலங்குகளின் அன்பைக் காட்டுவது.
இறைச்சி
212. உள்ளுறை எதனை ஆதாரமாகக் கொண்டு வரும்.
தெய்வம் ஒழிந்த கருப்பொருள்.
213. எரிபரந் தெடுத்தல் எத்திணை சார்ந்தது?.
வஞ்சித்திணை
214. நூழில் என்பது எதைக் குறிக்கும்.
வாளை வீசுதல்.
215. "பிணி" எம் மெய்ப்பாட்டோடு தொடர்புடையது.
இளிவரல்.
216. சுட்டிக்கூறா உவமம் எது?.
தொகை உவமம்.
217. பத்துப்பாட்டின் உரையாசிரியர் யார்?
நச்சினார்க்கினியர்.
218. சங்க இலக்கியப் பதிப்பிற்குப் பெரிதும் பாடுபட்டவர் யார்?
உ.வே.சா.
219. நற்றிணைக்கு உரை எழுதியவர் யார்?
பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்.
220. நாலடியாருக்கு முதன் முதலில் உரைகண்டவர் யார்?
பதுமனார்
221. 9000 படி எழுதியவர் யார்?
நஞ்சீயர்
222. சங்க நூல்களுக்கு (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) வசனம் எழுதியவர் யார்?
ந.சி.கந்தையாபிள்ளை.
223. தொண்டைமான் இளந்திரையனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல் எது?

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

பெரும்பாணாற்றுப்படை.

224. தகடூர் அதியமானை வெற்றி கொண்ட சேர மன்னன் யார்?
பெருஞ்சேரலிரும்பொறை.

225. குறுந்தொகையின் அடியளவு யாது?
4-8.

226. கலித்தொகை பாடல்களின் எண்ணிக்கை என்ன?
150.

227. ஐங்குறுநூற்றின் முல்லைத்திணை ஆசிரியர் யார்?
பேயனார்.

228. ஐங்குறுநூறு நெய்தல் திணையின் ஆசிரியர் யார்?
அம்மூவனார்.

229. சங்க இலக்கியப் பாடல்களில் பெரும்பான்மையாக அமைந்துள்ள பாவகை.
ஆசிரியப்பா.

230. அகமும் புறமும் அமைந்துள்ள தொகை நூல் எது?
பரிபாடல்.

231. "புலவர் பாடாது வரைக என் நிலவரை"- என்று கூறிய அரசன்.
தலையாலங்கானத்துச்செருவென்ற பாண்டியநெடுஞ்செழியன்.

232. அகநானூற்றுப் பாடல் ஒன்றினைப் பற்றிய மு.வ.வின் திறனாய்வு.
ஓவச்செய்தி.

233. சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர் யார்?
நல்லூர் நத்தத்தனார்.

234. "சுடினும் செம்பொன் தன்ஒளி கெடாது" – இவ்வரியுள்ள நூல் எது?
வெற்றிவேற்கை

235. இறையனாரின் பாடல் இடம் பெற்ற நூல் எது?
குறுந்தொகை.

236. தொகை நூல்களில் காலத்தால் பிற்பட்டது,
பரிபாடல்.

237. தம் காதல் அனுபவத்தை அகப்பாடலாகப் பாடிய புலவர் யார்?
ஆதிமந்தி.

238. "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்" என்று கூறும் நூல் எது?
கலித்தொகை.

239. பாரி மகளின் புரவலராக இருந்த புலவர் யார்?
கபிலர்.

240. திணை மயக்கம் அதிகம் இடம் பெற்ற நூல் எது?
பொருநராற்றுப்படை.

241. நல்லியக்கோடனைச் சிறப்பித்துக்கூறும் நூல் எது?

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

சிறுபாணாற்றுப்படை.

242. "ஒரு குடியில் கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்"
இளமைபா ராட்டும் உலகு – இவ்வரியுள்ள நூல் எது?
நான்மணிக்கடிகை

243. பூரிக்கோ முடித்த தொகை?
குறுந்தொகை.

244. "தாழ்வோரை நீசிரி யாதே – மிக
வாழ்வோரைக் கண்டுநீ வயிறெரியாதே" என்று கூறியவர் யார்?
மாயூரம் முன்சீப் வேதநாயகர்

245. நற்றிணையின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்?
பெருந்தேவனார்

246. முடத்தாமக்கண்ணியார் பாடிய ஆற்றுப்படை நூல் எது?
பொருநராற்றுப்படை.

247. அகநானூற்றுப் பாடல்களின் குறிஞ்சிக்குரிய பாடல் என்ன?
2,8

248. அகப்பாடல்களில் அதிகமாக உள்ளுறை பெறும் திணைப்பாடல்கள் எது?
மருதத்திணை.

249. குறுந்தொகையில் எண்ணிக்கை கடவுள் வாழ்த்துடன் சேர்த்து எத்தனைப் பாடால்கள் உள்ளன?
402.

250. பதிற்றுப்பத்தில் பரணர் பாடியது எத்தனையாவது பத்து?
ஐந்தாம் பத்து.

251. பரிபாடல்களில் எண்ணிக்கையாக உரையால் அறிவது.
70.

252. ஓரங்க நாடக அமைப்பில் அளவு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள தொகை நூல்.
கலித்தொகை.

253. உரையாசிரியர் அதிக அளவு மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள தொகை நூல் எது?
குறுந்தொகை.

254. நக்கீரர் திருமுறுகாற்றுப்படையில் "ஆவினன் குடி'' என்ற சொல்லால் குறிப்பிடப்படும் தலம் எது?
பழனி.

255. பத்துப்பாட்டில் அதிக அடி அளவுள்ளது.
மதுரைக்காஞ்சி.

256. பிசிராந்தையாரின் நட்புடைய மன்னன்.

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

கோப்பெருஞ்சோழன்.

257. தமிழ்ப் பேரகராதியின் பதிப்பாசிரியர் யார்?
எஸ்.வையாபுரிபிள்ளை.

258. பண்டைத்தமிழ் இலக்கியங்கள் பலவற்றை முதன்முதலாக அச்சேற்றியவர் என்ற பெருமைக்குரியவர் யார்?
உ.வே. சாமிநாதையர்.

259. ‘உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே’ எனும் அடியை முதலில் அறிமுகம் செய்த நூல் எது?
புறநானூறு

260. யாப்பு வகையால் தலைப்பினைக் கொண்ட நூல் எது?
கலித்தொகை.

261. “யாயும் ஞாயும் யாரா கியரோ” எனத்தொடங்கும் அடியைக் கொண்ட நூல்?
குறுந்தொகை.

262. வஞ்சினமுறைத்த சங்ககால மன்னர் யார்?

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்.

263. பார்க்காமலே நட்புகொண்டு பெருமையுற்ற மன்னன் யார்?
கோப்பெருஞ் சோழன்.

264. “மன்னன் மக்களுக்கு உயிர்” என அறிவுறுத்திய புலவர்.
மோசிகீரனார்.

265. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் அவையில் புலவராக விளங்கியவர் யார்?
மாங்குடி மருதன்.

266. “முதலிலார்க்கு ஊதியம் இல்லை” – இவ்வரியுள்ள நூல் எது?
பழமொழி

267. ‘நின்ன கண்ணியும் ஆர்மிடைந்தன் றே’ நின்னொடு பொருவோன் கண்ணியும் ஆர்மிடைத்தன்றோ - இவ்வடியில் குறிப்பிடப்படும் அரசன் யார்?
சோழன்.

268. வெண்ணிப்பறந்தலைப் போரில் வெற்றிகொண்டவன்.
சோழன்.

269. பத்துப்பாட்டின் ஆற்றுப்படை நூல்கள் எத்தனை?
5.

270. தாயில் சிறந்த தமரில்லை – இவ்வரியுள்ள நூல் எது?
நான்மணிக்கடிகை

271. “வான்பொய்ப்பினும் தான் பொய்யா மலைத்தலைய கட காவிரி” என வரும் தொடர்கள் இடம்பெற்ற நூல் எது?
பட்டினப்பாலை.

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

272. பண் வகுக்கப்பட்ட தொகை நூல் எது?
பரிபாடல்.

273. கலித்தொகையின் பிரிவுகள் எத்தனை?
5.

274. பெருந்தேவனார் இயற்றிய நூல் எது?
பாரதம்

275. ஒருதலைக் காதலைக் குறிப்பது
கைக்கிளை.

276. "கல் தேயும், தேயாது சொல்" – இவ்வரியுள்ள நூல் எது?
பழமொழி

277. பெண்டிர் மடலேறுவதற்காகப் பாடும் நூல் எது?
சிறிய திருமடல்.

278. "வடவேங்கடம், தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுலகம்" என்ற வரி இடம்பெறும் நூல்
தொல்காப்பியம்.

279. சங்க நூல்கள் என்பவை எவை?
பத்துப்பாட்டு, எட்டுத்தொகை.

280. நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன் யார்?
நெடுஞ்செழியன்.

281. "கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்குற்றம்" – கூறியவர் யார்?
ஔவையார்

282. "அறம்பாடிற்றே ஆயிழை கணவ"- என்ற அடி காணப்படுவது.
புறநானூறு.

283. பாரி வள்ளலின் நெருங்கிய நண்பர் யார்?
கபிலர்.

284. பாட்டுடைத்தலைவன் பெயரால் அமைந்த ஆற்றுப்படை நூல் எது?
திருமுருகாற்றுப்படை.

285. பத்துப்பாட்டுள் சிறியது எது?
முல்லைப்பாட்டு.

286. "நெஞ்சை அள்ளும் சிலம்பு" எனக்குறிப்பிட்டவர் யார்?.
பாரதியார்.

287. புறப்பாடல்களில் கற்பனையாகப் பாடும் மரபு உண்டா?
புலவர் கற்பனையாக பாடும் மரபு இல்லை.

288. வெறியாட்டு என்பது ?
முருகனை வேண்டிச் செய்யும் சடங்கு.

289. சங்ககால அகப்பாடல்கள் நாடகப்பாங்குடையது எது?

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

கலித்தொகை.

290. அகமும் புறமும் பெற்ற நூல் எது?
பரிபாடல்.

291. தலைவன் தலைவிக்கிடையே உள்ள உறவு எவ்வகை?
அன்பு.

292. இலக்கியத்தில் கனவுகள் எதற்குப் பயன்படுகிறது?
கதை நிகழ்ச்சியின் முடிவை முன்பாகச் சுட்டுவதற்கு.

293. கைக்கோள் என்பது.
களவும் கற்பும்

294. செயற்கைப் பொருளை
இற்றெனக்கிளக்க வேண்டும்.

295. பெருந்திணை, கைக்கிளை ஆகிய திணைகளுக்கு.
முதற்கருப்பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

296. "இல்லாத காரியத்தை இச்சித்துச் சிந்தைவழிச்
செல்லாமை நல்லோர் திறங்காண் பராபரமே" – என்று கூறியவர் யார்?
தாயுமானவர்

297. உலக முதன் மொழி தமிழே! திராவிட மொழிகளின் தாய்மொழி தமிழே! ஆரிய மொழிக்கு மூலமும் தமிழே! – கூறியவர் யார்? என்று
தேவ நேயப் பாவாணர்

298. பெருங்குறிஞ்சி என்று பாராட்டப்பெறும் நூல்.
குறிஞ்சிப்பாட்டு.

299. சமய விகற் பங்களெலாந் தவிர்ந்தே
எவ்வுலகுஞ் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும் – என்றவர் யார்?
வள்ளலார் இராமலிங்க அடிகள்

300. தலைத்தடுமாற்றம் என்பது.
உத்திவகைகளில் ஒன்று.

**இதன் தொடர்ச்சியாக புத்தகமாக உள்ளது.**
**மெட்டீரியல் / புத்தகம் பெற விரும்புபவர்களுக்கு**
**இந்த எண்ணை (98651 30130) தொடர்பு கொள்ளவும்.**

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130